



கடலூர் மாநகர கழகம் சார்பில், முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் 102ம் ஆண்டு பிறந்த நாளை முன்னிட்டுகடலூர் கிழக்கு மாவட்ட கழக பொருளாளர் எம்.ஆர்.கே.பி.கதிரவன் தலைமையில், உழவர் சந்தையிலிருந்து அமைதி பேரணியாகச் சென்று, கடலூர் மாநகர கழக அலுவலகத்தில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த கலைஞர் அவர்களின் திருவுருவ படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தப்பட்டது. முன்னதாக உழவர் சந்தையில், 700 நபர்களுக்கு காய்கறிகள் மற்றும் புடவைகள், வேட்டிகள், உணவு, மரக்கன்றுகளை எம்.ஆர்.கே.பி.கதிரவன் வழங்கினார். இந்நிகழ்வில் கழக தேர்தல் பணிக்குழு செயலாளர், இள. புகழேந்தி ,மாநகர கழக செயலாளர் கே.எஸ்.ராஜா, மேயர் சுந்தரி ராஜா, ஒன்றிய கழக செயலாளர் பி.சுப்பரமணயன், பொதுக்குழு உறுப்பினர் கே.பி.ஆர்.பாலமுருகன் ,மாநகர கழக அவைத்தலைவர் பி.பழனிவேல், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### குமரி மாவட்டம்: தடுப்பணையில் தவறி விழுந்த இருவரைக் காப்பாற்றியபோது நீரில் மூழ்கி

# உயிரிழந்தவரின் குடும்பத்துக்கு ரூ.10 லட்சம் நிதி!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, ஜூன் 4-

கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டம், குழித்துறை நகரம் கிராமம், குழித்துறை தாமிரபரணி ஆறு தடுப்பணையில் தவறி விழுந்த இருவரை காப்பாற்றிய நிலையில், எதிர்பாராத வகையில் நீரில் மூழ்கி உயிரிழந்த பீட்டர் ஜான்சன் அவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவியினை - முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

இது குறித்து தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது:-

கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டம், குழித்துறை நகரம் கிராமத்தைச் சேர்ந்த பீட்டர் ஜான்சன் என்பவர் குழித்துறை தடுப்பணை மேல்பகுதியில் வாவுபலி திடல் அருகில் குளிப்பதற்காக அமைக்கப்பட்டுள்ள படிக்கட்டில் நின்று குளிப்பதை வழக்கமாகக் கொண்டுள்ளார்.

இவர் 01.06.2025 அன்று சுமார் காலை 11.30 மணியளவில் மேற்படி பகுதியில் குளிக்கச் சென்றபோது தடுப்பணையில் வெட்டுமணி பகுதியிலிருந்து குழித்துறை, மதிலகம், நல்லூர் பகுதியைச் சேர்ந்த மனோ (வயது 17) மற்றும் சிறுவன் அகிலேஸ் (வயது 12) ஆகிய இருவரும் நடந்து வந்து கொண்டிருக்கும்போது தவறி தடுப்பணையின் கீழ்ப்பகுதியில் விழுந்ததைக் கண்ட பீட்டர் ஜான்சன் இந்த நபர்களை காப்பாற்ற தடுப்பணையின் கீழ்ப்பகுதியில் இறங்கி இரண்டு இளைஞர்களையும் காப்பாற்றி கரை ஏற்றிவிட்ட நிலையில் எதிர்பாராதவிதமாக நீரில் மூழ்கி உயிரிழந்தார் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டுமிகுந்த அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன்.

மேலும், இச்சம்பவத்தில் தன் உயிரையும் பொருட்படுத்தாமல் இரண்டு இளைஞர்களை காப்பாற்றி தன் உயிரைத் தியாகம் செய்துள்ள பீட்டர் ஜான்சன் அவர்களின் உயிரிழப்பு அவரது குடும்பத்தினர் நண்பர்கள் மற்றும் அப்பகுதி மக்களுக்கு ஓர் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.

மேலும், பீட்டர் ஜான்சன் அவர்களின் குடும்பத்தினருக்கும் அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, பீட்டர் ஜான்சன் என்பவரின் துணிச்சல் மற்றும் அவரது தியாக உணர்வைப் போற்றும் வகையில் அவரது குடும்பத்தினருக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து பத்து இலட்சம் ரூபாய் வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு தமிழ்நாடு அரசின் செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

### முத்தமிழறிஞர் கலைஞரின் 102 வது பிறந்த நாள் ‘செம்மொழி நாள்’

# மருத்துவ முகாம்கள் நடத்தி சிறப்பாகக் கொண்டாடிடுவீர்!

## மருத்துவ அணியினருக்கு - அணி செயலாளர் எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ. வேண்டுகோள்!

சென்னை, ஜூன் 4-

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளான செம்மொழி நாளையொட்டி மருத்துவ அணியினர் மருத்துவ முகாம்கள் நடத்தி சிறப்பாக கொண்டாடிடுவீர் என அணியின் செயலாளர் மருத்துவர் எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ. கேட்டுக் கொண்டுள்ளார்.

இது குறித்து மருத்துவ அணிச் செயலாளர் மருத்துவர் எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தமிழினத் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளை, கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி ‘செம்மொழி நாளாக’ கொண்டாடிடுவோம்.

பொதுமக்கள் பயனடையும் வகையில் தமிழ்நாடு முழுவதும் மருத்துவ முகாம்களை ஒருங்கிணைத்து நடத்துமாறு மருத்துவ அணி உடன்பிறப்புகளை கேட்டுக்கொள்கிறோம்.

மருத்துவ அணியின் மாவட்ட அமைப்பாளர்கள், அனைத்து நிர்வாகிகளையும் ஒருங்கிணைத்து முகாம்களை நடத்த வேண்டுகிறோம்.

இவ்வாறு மருத்துவர் எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ. அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### முனைவர் வா.மு.சே.முத்துராமலிங்க ஆண்டவர் தொகுத்து பதிப்பித்த

# “கலைஞர் ஒரு முத்தமிழ்ப் பல்கலைக்கழகம்” நூல்!

## அமைச்சர் கோவி.செழியன் வெளியிட்டு சிறப்புரை!

தஞ்சை, ஜூன் 4 -

பச்சையப்பன் கல்லூரி மேனாள் தமிழ்த்துறைத் தலைவரும், கொ. கந்தசாமி நாயுடு ஆடவர் கல்லூரி முதல்வரும் தமிழ்ப் பல்கலைக் கழக ஆட்சிக் குழு உறுப்பினருமான முனைவர் வா.மு.சே. முத்துராமலிங்க ஆண்டவர் தொகுத்து பதிப்பித்த “கலைஞர் ஒரு முத்தமிழ்ப் பல்கலைக் கழகம்” நூல் வெளியீட்டு விழா 7.6.2025 சனிக்கிழமை மாலை 5 மணியளவில் தஞ்சாவூர் கீழவாசல் பெசன்ட் அரங்கத்தில் (லாட்ஜ்) நடைபெறுகிறது.

இந்நூல் வெளியீட்டு விழாவில் மதுரை மண்டல திராவிட கருத்தியல் ஆசிரியர் சங்கம் முனைவர் பெரி. கபிலன் வரவேற்கிறார்.

தஞ்சை மத்திய மாவட்டக் கழகச் செயலாளர் துரை சந்திரசேகரன் எம்.எல்.ஏ. தலைமை வகிக்கிறார்.

ச.முரசொலி எம்.பி. சு.கல்யாண சுந்தரம் எம்.பி., மு. சண்முகம் எம்.பி. டி. கே.ஜி. நீலமேகம் எம்.எல்.ஏ., மேயர் சண்.இராமநாதன், துணை மேயர் மருத்துவர் அஞ்சுகம் பூபதி, மண்டலக் குழுத் தலைவர் எஸ். சந்திரசேகர மேத்தா ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இந்நூலை உயர் கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் வெளியிட்டு சிறப்புரையாற்றுகிறார்.

திருஞான சம்பந்தர் அறக்கட்டளை செயலாளர் டாக்டர் எம். ஜெய்லானி நூலை பெற்றுக் கொள்கிறார்.

எழுத்தாளர் சா. அடைக்கலம் நன்றி கூறுகிறார்.

விழாவில் முனைவர் வா.மு.சே. ஆண்டவர் ஏற்புரையாற்றுகிறார்.



திருப்பத்தூர் ஒன்றியம் அகரம் வவ்வால் தோப்பு, ஏ.கே. மோட்டூர் எம்.ஜி.ஆர்.நகர் கதிரம்பட்டி கோனேரி குப்பம் உள்ளிட்ட இடங்களில் பகுதி நேர நியாய விலைக் கடைகள் மற்றும் அங்கன்வாடி மையத்தை அ. நல்லதம்பி எம்.எல்.ஏ. திறந்து வைத்தார்.

# வரலாறு விடுதலையான நாளும் கூட!

## “கணையாழி” தலையங்கம்!




திருவள்ளுவரைச்
சனாதன துறவியாக்கிட
ஆளுநர் தீட்சை வழங்க
மேற்கொள்ளும் முயற்சியை
செம்மொழி நாள் அறிவிப்பால்
முறியடித்திருக்கிறார்
தமிழ்நாடு முதலமைச்சர்!

திருவள்ளுவரை உலக மானுடநேயச்
சிந்தனையாளராகக் காட்டும்
பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்ற
முழக்கத்தை முன்வைத்துச்
உலகச் செம்மொழி மாநாடு நடத்திய
முத்தமிழ் அறிஞர் பிறந்த நாளைச்
செம்மொழி நாளாகக் கொண்டாட
அறிவித்திருக்கிறார்
தமிழ்நாடு முதலமைச்சர்!

வாழ்ந்த காலத்தை
வரலாறு ஆக்கியவர்
கலைஞர் என்றால்
வாழும் காலத்தை
வரலாறு ஆக்குகிறார்.
தமிழ்நாடு முதலமைச்சர்!

வரலாறு கைது செய்யும் என்று
ஒதுங்கி நிற்காமல்
வரலாறு விடுதலை செய்யும் என்று
காத்திருக்காமல்
மொழி, இன வரலாற்றின்
விடுதலைக்காகக்
களத்தில் நின்று போராடிய
கலைஞரின் பிறந்தநாளைச்
செம்மொழி நாளாக அறிவித்திருக்கிறார்.
தமிழ்நாடு முதலமைச்சர்!

மொழித் தீண்டாமையால்
முடக்கப்பட்டிருந்த தமிழை -
1856 இல் கால்டுவெல்
தொடங்கி வைத்த
உயர் தனிச் செம்மொழிக்
கொள்கையை -
1887 இல்

பரிதிமார் கலைஞர் கோரிக்கையாக்கினார்.
கோரிக்கையின் தொடர் முழக்கப்
போராட்டத்தைக் கையில் எடுத்து

இந்திய நாடாளுமன்ற
இரு அவைகளின் கூட்டுக் கூட்டத்தில்
அன்றைய குடியரசுத் தலைவர்
அப்துல் கலாமை
அறிவிக்கச் செய்தவர்
முத்தமிழ் அறிஞர் கலைஞர்.
அறிவித்த மாதம்
கலைஞர் பிறந்த ஜூன் மாதம்.

ஐக்கிய முற்போக்குக் கூட்டணி
அமைச்சரவை கூடி அறிவித்தது
அறிஞர் அண்ணா பிறந்த
செப்டம்பர்!
“தந்தை பெரியார் என்னைத்
தட்டிக் கொடுத்துப் பாராட்டிய போது
அறிஞர் அண்ணா அரவணைத்து
அன்புமழை பொழிந்த போது
அடைந்த மகிழ்ச்சிக்கு ஈடானது
செம்மொழி அறிவிப்பு” என்று
கொண்டாடியவர் கலைஞர்!

இந்தியாவில் இதுவரை
அறிவிக்கப்பட்டுள்ள
செம்மொழிகள் 11.
அவற்றுள்
முதலில் இருப்பது தமிழ் மொழி.

ஒன்றிய அரசு
தமிழைச் செம்மொழி என்று
அறிவித்த பின்புதான்
தமிழைக் காட்டி
வடமொழியே (2005) அறிவிக்கப்பட்டது.

அதன்பின் தெலுங்கு, கன்னடம் (2008)
மலையாளம் (2013) ஒடியா(2014).

அதன்பின் 2024 இல்
மராத்தி, பாலி, பிராகிருதம்
அசாமி, வங்காளம்
அறிவிக்கப்பட்டுள்ளன.

தமிழைத் தொடர்ந்து
அறிவிக்கப்பட்டுள்ள
வடமொழி உட்பட
மற்ற 10 மொழிகளுக்கும்
தமிழே வழிகாட்டி -
முன்னுதாரணம் !

அப்படியென்றால்
முத்தமிழ் அறிஞர்
கலைஞர் பிறந்த நாளைத்
தமிழ்ச் செம்மொழி நாள் என்று
அறிவிக்காமல்
ஜூன் 3, செம்மொழி நாள் என்று
முதலமைச்சர் அறிவித்திருப்பது
தமிழர்கள் மட்டும் இல்லை
மற்ற 10 மொழிக்காரர்களும்
அவரவர் மொழி செம்மொழியான
நாளைக் கொண்டாடுவதோடு
அதற்குக் காரணமான
கலைஞர் பிறந்தநாளையும்
நன்றியுள்ளவர்கள்
கொண்டாட வேண்டும் என்பதைக்
குறிப்பால் உணர்த்துகிறது!

செம்மொழி என்றால்
தமிழைப் போலவே மக்களுக்குக்
கலைஞரும்
நினைவுக்கு வருகிறார் என்று
சென்னையில் கலைஞர் தொடங்கிய
செம்மொழிப் பூங்கா,
தொல்காப்பியப் பூங்கா எல்லாம்
சிறைப்பட்டுக் கிடந்தன
கடந்த ஆட்சியில்

சங்கத் தமிழ், தொல்காப்பியப் பூங்கா,
குறளோவியம் என்று
கடந்த காலத் தமிழின்
வாழ்வியல் சிந்தனைகளை
நவீன காலத்திற்குப் பொருத்திப்
பொதுமக்களிடமும்
கொண்டு சேர்த்தவர் கலைஞர்!

தமிழர்களின்
மூளை இழுப்பறைகளில்
சாதி, வருணக் கோட்பாடுகளால்
சிறையில் அடைக்கப்பட்டிருந்த
தமிழை
விடுதலை செய்தவர் கலைஞர்!
ஆகவே
ஜூன் 3
செம்மொழி நாள் மட்டுமில்லை
தமிழ் மொழி வரலாறு
விடுதலையான நாளும் கூட!



அன்புடன்
**ம.ரா.**

நன்றி: **“கணையாழி”**
ஜூன் 2025